**OS. 62/2024**

**நாள். 24.02.2026.**

**பி.வா.சா. 1 – ஆனந்தசிவா**

<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

நான் எந்த தேதி மாதம் வருடத்தில் பிறந்தேன் என்றால் 25.05.1987. 4ம் அயிட்ட சொத்தை என் தகப்பனார் கிரையம் வாங்கும்போது நான் பிறக்கவில்லை என்றால் சரிதான். தாவா 2வது இலக்க சொத்தை என் தகப்பனார் கிரையம் பெறும்போது எனக்கு 15 வயதுதான் ஆனது என்றால் சரிதான். தாவா 1வது இலக்க சொத்தை என் தகப்பனார் கிரையம் பெறும்போது எனக்கு 25 வயதுதான் ஆனது என்றால் சரிதான். நான் 12ம் வகுப்பு படித்து முடித்த வருடம் என்ன என்றால் 2002. நான் ITI எந்த வருடம் முடித்தேன் என்றால் 2006. என் தகப்பனார் கடை வைத்து தொழில் செய்து கிடைத்த வருமானத்தில்தான் பிள்ளைகளை வளர்த்தார் என்றால் சரிதான். தாவா வழக்கில் வாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் மூலம்தான் என் தகப்பனார் கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். 3ம் இலக்க சொத்து என் தகப்பனாருக்கு எப்படி பாத்தியம் என்றால் கிரையம் பெற்ற வகையில் பாத்தியம். நான் தற்போது என் தகப்பனார் கட்டிய வீட்டில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். 1, 4 வாதிகள் நான் குடியிருக்கும் வீட்டில்தான் குடியிருந்தார்கள் என்றால் சரிதான், 2, 3 வாதிகள் வந்து செல்வார்கள் என்றால் சரியல்ல. தற்போது வரைக்கும் 1, 4 வாதிகள் நான் குடியிருந்து வரும் வீட்டில்தான் வசித்து வருகிறார்கள் என்றும், 2,3 வாதிகள் அவ்வப்போது தாயாரை பார்க்க வந்து செல்வார்கள் என்றும், நான் வழக்கிற்காக அவர்கள் குடியிருக்கவில்லை என்றும், வந்து செல்லவில்லை என்றும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1, 2, 4 இலக்க சொத்துக்களில் கூட்டாக விவசாயம் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. என் தகப்பனார் எந்த ஒரு ஆவணம் மூலமும் எனக்கு பாத்தியப்படுத்தி எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரிதான். 2, 3, 4 வாதிகளுக்கு 30, 40 பவுன் நகைகள் போட்டு திருமணம் செய்து வைத்ததாக சொல்வது பொய்

என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் தற்போது வரை கூட்டு அனுபவத்தில்தான் இருந்து வருகிறது என்றும், அதில் வாதிகளுக்கு 1/5 பாகம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. வாதிகள் என்னிடம் வந்து பாகம் கேட்கவில்லை என சொல்வது தவறு என்றும், அவர்கள் பாகம் கேட்டு நான் கொடுக்கவில்லை என்பதால்தான் வாதிகள் தாவா வழக்கை தாக்கல் செய்தார்கள் என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.